**சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.**

**நாள்		: 19.06.2026**

**வழக்கு எண்		: MCOP.14/2025**

**சாட்சி பெயர்		: திரு.ஜெயபிரகாஷ் / PW.1**

**3வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

26.03.2023ம்தேதி மாலை 5, 5.15 மணியளவில் எனக்கு விபத்து நடந்தது. விபத்து சமயத்தில் TN 69 L 2667 என்ற TVS STAR city பைக்கில் சென்று கொண்டிருந்தேன். என் மகளை பின் சீட்டில் அமர வைத்து அழைத்து சென்றேன். உமரிக்காடு அருள்மிகு கோட்டை வாழ் அய்யன்கோவில் போக்குவரத்து அதிகம் உள்ள இடம் என்றால் ரொம்ப அதிகமாக இருக்காது. அந்த ரோடு கிழமேல்ரோடு எங்கள் ஊருக்கு செல்லவேண்டும் எனில் ரோட்டை கடக்க வேண்டும் என்றால சரியல்ல, எதிர்திசையில் செல்லவேண்டும். எதிர்திசையில் வந்த வாகனத்தை கவனிக்காமல் இடது புறத்திலிருந்து வலது புறம் கடக்க முயற்சித்ததால்தான் இந்த விபத்து நடந்தது என்றால் சரியல்ல. விபத்தில் அடிப்பட்ட என்னை ஏரல் அரசு மருத்துவனையில் முதலுதவிக்காக சிகிச்சைக்கு சேர்த்தார்கள். விபத்தில் எனது மகளுக்கு லேசான காயம் ஏற்பட்டது என்றால் சரிதான், எனக்கு தாடை, முட்டு, கை, வலது கால்முட்டு ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது. விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணிந்து இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்று இருந்தால் எனக்கு தாடையில் ஏற்பட்ட காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. தாடையில் ஏற்பட்ட காயத்திற்காக தூத்துக்குடி அரசு மருத்துவனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துகொண்டேன். அங்கிருந்து பூரண குணம் அடைந்துவிடுவிக்கப்பட்டேன் என்றால் அதிலிருந்து 10,15 நாட்கள் ஆனது குணமடைவதற்கு. இந்த விபத்தில் எனக்கு நிரந்தர ஊனமோ, பகுதி ஊனமோ இல்லை என்றால் சரியல்ல, கீழ்தாடையில் இரண்டு பற்கள் விழுந்துவிட்டன. வலதுகால் முட்டியில் இரண்டு முறை அறுவைசிகிச்சை செய்துள்ளேன். எனக்கு பகுதி நிரந்தர ஊன சதவீத எவ்வளவு என்று ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்துக்கு முன்பு காய்கறிகடையில் வேலை பார்த்தேன், தற்போது அதை வேலையைதான் பார்க்கிறேன் என்றால் சரிதான். எனக்கு வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. காய்கறிகடையில் வேலை பார்த்து மாதம் ரூ.15,000/- பெறுவதற்கான சம்பளவிபரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல. விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளரை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுகொண்ட தொகையானது அதிகமானது என்றால் சரியல்ல. விபத்துக்கு என்னுடைய கவனக்குறைவும், அஜாக்கிரையும் காரணம் என்பதால் 1,2 எதிர்மனுதாரர்களுக்காக 3 எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனவே நான் கேட்டுகொண்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**